1007

OFFICE OF ... BOOKS
18 MAY 1956
MADRAS

பதிவு எண்— M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்ருண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனுர்.

1007
2-56

கிளை-8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: சித்திரை கரு 27—4—56 தளிர்-27

திருக்குறள் பிழிவு:

ஆட்சி மொழி

ஆட்சி வசதி, மொழி இல்லாமல் இனிது நடைபெருது; ஆட்சியாளர் அயல் நாட்டவராய் இருந்தால் அவர், தம்மொழியையே ஆட்சிமொழியாக்குதல் இயல்பு; ஆட்சியாளர் சொந்த நாட்டவராய் இருந்தால், குடிமக்களின் தாய்மொழியே ஆட்சி மொழியாகும். எப்படி இருந்தாலும், குடிமக்கள் அளவுக்கு, அவர்தம் தாய் மொழி ஆட்சி மொழி ஆவதே அவர்க்கு நலம் தரும்; செலவும் குறையும்.

ஆனல், உலகத்தில் ஒரு நாட்டவரை அந் நாட்டவரே ஆளுதல் என்பது நிலைபெறவேண்டுமானல், அந் நாட்டவர் ஆற்றலும் உட்பிளவும் இல்லாதவராய் இருக்க வேண்டும். அயல்நாட்டவரும், நாடு கவரும் முறையற்ற போக்கைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். பற்று இடையில் நின்று எல்லாரையும் ஆட்டிவைக்கின்றது. அதன் முதல் அடையாளமே மொழித் திணிப்பு.

திருவள்ளுவர், "ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர், பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை" என்று ஒரு கருத்துத் தெரிவிப்பதனுல், தாய்நாடு, தாய்மொழி, தம் நிலைமை எல்லாவற்றிலும், தமக்குரிய உரிமை காத்துக் கொள்வோரே அறிஞராவர் எனக் கருதுதல் தெரிகின்றது. தம் நாட்டுக்கு அரசுரிமையும் தம் நாட்டு ஆட்சி மொழிக்குத் தாய்மொழி உரிமையும் பிறவும் பெறுகின்ற கடமை ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டென்பது இதனுல் புலப்படும்.

“முல்லைக் கொடி”

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்	ரூ.	0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா”

—புறநானூறு.

கிளை	மன்மத,	தளிர்
8	27-4-56	27

இயற்கை உணர்த்தும் உண்மை

‘பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை’ ‘முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமன்றே’, என்பது முறையே வள்ளுவரும், மணிமொழிப் பெம்மானும் முடிந்த முடிபாகக் கூறிய உண்மை; அம்மொழிகளை ஆழ்ந்து சிந்திக்க வேண்டுவது தலையாய கடன்.

வாழ்வுக்குப்பல தேவை; அத் தேவைகளுக்குள் தலையாயது பொருள். பொதுமையாகப் பயன்படும் பொருளிலிருந்தே பொது உள்ளம் – பொது நோக்கு – இவற்றின் விளக்கமாகப் பொது வாழ்க்கை திண்மையாகத் திகழும். பொருள் பொதுமையாக இன்றேல்உலக வாழ்க்கை செம்மையாக நடைபெறுமல் சீர்குலைய நேரும் என்பது பெரியோர்கள் கண்ட துணிபு. எனவே உலகப் பொதுமைக்குப் பொருட்பொதுமை இன்றியமையாததாகின்றது. அப்போதுதான் எல்லார்க்கும் பொதுவில் நடமிடுஞ் சிவத்தை உய்த்துணரத் தக்க நெஞ்சமும் நோக்கும் தோன்றுகின்றன.

சிவகதிக்குச் சீலம் தேவை; இன்றியமையாததுங்கூட; மக்கள் வாழ்க்கையில் சீலஞ் சிறக்கும் அரசு வேண்டப்படுவதோடு துணையுஞ் செய்தல் வேண்டும். முன்னாளில் சீலஞ்சார் அரசுகள் இருந்தன. செம்மைசால் வாழ்க்கைநிலைத்து நின்று விளங்கிற்று. பின்னாளில் சீலத்தினைச் சிதைத்து அல்லல் பட்ட அரசுகளும் தோன்றின; எனின், சீலத்தினை வளர்த்துப் போற்றுவதெப்படி? பொருட்பொதுமை முறையே உறுதுணை செய்ய வல்லது. மேலும், அப் பொருட்பொதுமை சமயத் தொடர்புள்ளது எனவும் தெளிகின்றோம்.

சமயத்தின் வடிவம் எப்போது குன்றும்? இயற்கையை விடுத்துச் செயற்கையிற் பெரிதும் நாட்டத்தினைச் செலுத்தும் அரசு தோன்றும் போதுதான் எனத் தெற்றெனக் கூறலாம். இயற்கை, மக்கள் வாழ்க்கையைப் பொருட்பொதுமையளவில் நிறுத்தி விடாது; சமயத்தையும் வாழ்க்கையில் ஒன்றுபடுத்திய தீரும். மனிதனை விலங்கினின்றும் பிரிப்பது சமயம். அத்தகைய நலமார்ந்த சமயத்தினை மனிதனும் விடமாட்டான். சமயமும் அவனை விடாது. இது, இயற்கை கண்டு, நாடோறும் உணர்த்தப்பட்டு வரும் உண்மையாம்.

‘மூர்த்தி’

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53, கிடங்குத் தெரு. சென்னை • 1.

"ஆசான் திறம் – காந்தாரம் ஆசானுக்கு அகச் சாதி காந்தாரம், புரச் சாதி சிகண்டி, அருகு, சாதி தசாக்கிரி, பெருகு சாதி சுருதி காந்தாரம்"

"பண் பண்ணியற்றிறம் திறம் திறத்திறம் என்பன சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்தம் என வடமொழிப் பெயராலும் வழங்குப, அவற்றுள் இது திறங் கூறிற்று"

இவ்வுரையில் இருந்து ஆசான்திறம் காந்தாரம் எனப்படும் என்பதையும், இது திறம் என்பதையும், திறமனப்படுவது ஐந்திசைதான் என்பதையும் நன்கு அறிய நேரிடுகிறது. மேலே கூறப்பட்ட தாரப் பண் இயற்கை முறையில் ஐந்திசைகளே பெற்றுள்ளது என்பதை நோக்குமிடத்து இவ்வுண்மை நன்கு வலியுறுகின்றது, மேலும், தாரப் பண்ணுகிய காந்தாரம் தமிழ் நாட்டில் முதற்பண்ணுகிவிளங்கியதால் இசைத்தமிழ் பிற்காலத்தில் பல்வேறு வகையில் வளர்ந்து, இன்றளவும் எம்நாட்டவரும் போற்றத் தக்க முறையில் தென்னிந்திய சங்கீதமாக மிகப் பரவி விட்டது எனலாம். இதுவன்றியும் முதலிசையாகிய தாரத்தின் குறியீட்டெழுத்து 'கா ஆனமையினுலே கா–தாரம் காத்தாரம் ஆகி அதுவும் மெலிந்து காந்தாரம் எனத் திரிவு பெறுவதும் இயற்கையேயன்ருே! ஆகவே பழைய தாரப் பண், ஆசான் திறம் எனப் பெயர் மாறுபாடடைந்து பின்னர்க் காந்தாரம் எனவும் மாறிவிட்டது என அறிதல் வேண்டும்.

திருத்தாண்டகம் பாடும் பண்

பழந்தமிழ் நாட்டில் அடிப்படையான பாலைகள் (இசைத் தமிழ்) ஏழு எனக் கூறப்படுகிறது. அவற்றுள் (ஏழிசைப் பாலைகள்) முதற் பாலை அதாவது **தார முறையில்** மேற்செம்பாலை எனப்படும். இதன் இசைநிலை அலகுநிலை முதலியன —

இசைநிலை: – தாரம் – குரல் – துத்தம் – கைக்கிளை – உழை – இளி – விளரி

அலகுநிலை: – 0 – 4. – 8. – 12 – 13 17 21

என நிற்றலால் இப் பாலை இக் காலம் (65–வது மேளம்) மேச கலியாணி ராகமாகும். இதுவே குரல் முதலாக வருமிடத்துச் செம்பாலை எனப்படும்.

இசைநிலை: – குரல் – துத்தம் – கைக்கிளை – உழை இளி – விளரி – தாரம்

அலகுநிலை: – 0 – 4 – 8 – 9 – 13 – 19 – 18

என நிற்றலால் இப் பாலை இக்காலம் (28 வது மேளம்) அரிகாம்போதி ராகமாகும். மேலும் குரல் எனும் இசையை முதலிசையாகக் கொண்டு விளங்குவதால் குரல் குரலாய செம்பாலை எனச் சிலப்பதிகாரம் கூறும். இப் பெரும் பாலையில் திருநாவுக்

கரசர் பாடிய திருத்தாண்டகப் பாடலை விருத்த முறையில் பாடுவது நம் நாட்டில் பண்டைய காலந் தொட்டு வழக்கில் உளது; இதுவே சிறந்த முறை யாகவும், தாண்டகப் பாடல்களைப் பண்ணோடு பொருத்துவதற்கு ஏற்ற முறையாகவும் இருப்பதால் இத் திருக்கழுக்குன்றப் பதிகத்தில் உள்ள நாவுக்கர சுப் பெருந்தகையின் பாடல்கள் இரண்டையும் மரபு வழுவாமல் பாடிப் பயன்பெறுவார்களாக.

நட்டபாடைப் பண்ணின் இலக்கணம்

குறிஞ்சி யாழ் என்று ஒரு கருவிக்குப் பெயர் உண்டு. குறிஞ்சி யாழ் என ஒரு பண்ணிற்கும் பெய ருண்டு. முன்னையது நிலம் பற்றி வந்த கருவிப்பெயர். பின்னையது நரப்படைவு பற்றி வந்த பாலைப் பெயர். ஏழிசையும் ஒருங்கே அமைவுற்றிருக்கும் ஒரு பாலைக் குப் பண் என்ற பெயர், பொதுப்படக் கூறப்படும். ஆறிசைகள் அமைவுற்ற ஒரு பாலைக்குப் 'பண்ணி யற் றிறம்' எனவும் ஐந்திசைகள் அமைவுற்ற ஒரு பாலைக்குத் 'திறம்' எனவும், நான்கு இசைகள் அமைவுற்ற ஒரு பாலைக்குத் 'திறத்திறம்' எனவும் கூறப்படுவது பழந்தமிழ் வழக்கு; பண்ணாகிய குறிஞ்சியாழின் இசைநிலை வருமாறு; இது குரல்குர லாய செம்பாலை ஆனமையினாலே குரல்முதலாக எழு திக் காண வேண்டும்.

தாரப் பண்

இப் பண், முதன்முதலில் குழல் வழி ஐந்திசை முறையில் தோன்றிய பண் ஆகும். இதன் பெயரும் முதன்முதலில் தாரம் எனவே கூறப்பட்டது. தாரம் என்ற சொல்லும் முதல் என்றபொருளினைத் தரும்; இச் சொல்லின் பகுதி தார்; விகுதி அம். ஆதலால். தாரம் எனக் கூறப்பட்டது. இசைத் தமிழில் முதல் ஒலிக்குத் தாரம் எனப் பெயர் வைத்தது இயற்கை யே. இதன் வழி எழுந்த மற்றய இசை: – குரல்– துத்தம் – உழை – இளி என்பவாகும். இவற்றை நிரல்பட வைக்குமிடத்து இவ்வாறு அமையும்.

1.	2.	3.	4.	5.
தாரம் –	**குரல்** –	**துத்தம்** –	**உழை** –	**இளி**

இப் பண், முதல் முதலாகத் தோன்றிப்பின்னர்ப்பல் வேறு பண்கள் தோன்றத் தான் **ஆ**சான் போன்று விளங்கியதால், இதனைச் சிலப்பதிகாரத்தில் ஆசான் திறம் எனக் கூறப்பட்டது, நுயினும், சிலப்பதிகார உரையாசிரியர்கள் ஆசான்திறம் – **காந்தாரம்** எனக் கூறியுள்ளமையால் இதற்கே காந்தாரம் என ஒரு பெயரும் உண்டு என அறிகின்றோம்; பரிபாடலில் பல பாடல்கள் பண் காந்தாரம் எனக் குறிக்கப்படு வதாலும் நன்கு உணரலாம்.

அன்றியும் அடியார்க்கு நல்லார் என்ற பெரிய வர் இதன் இலக்கணத்தினைக் கீழ் வருமாறு தரு கிறார்.

3. கைக்கிளை – 8 – அந்தர காந்தாரமாகவும்
4. உழை – 9 – சுத்த மத்தியமமாகவும்
5. விளரி – 17 – சது சுருதி தைவதமாகவும்
6. தாரம் – 18 – கைசிகி நிஷாதமாகவும்

நிற்றலால் இக்காலம் இப் பண் நாட்டக் குறிஞ்சி இராகத்தினை ஒத்து வந்துவிடுகிறது. ஆகவே நைவளம் என்ற நட்டபாடைப் பண் இக்காலம் நாட்டக் குறிஞ்சி என நன்கு அறியலாமன்றோ!

இதற்கு இன்னும் ஆதாரம் ஒன்றுண்டு. அதுதான் திருவாவடுதுறை ஆதீன ஏட்டுச் சுவடிகளில் நட்டபாடை என்பது நாட்டக் குறிஞ்சி எனப், பொன்னோதுவா மூர்த்திகளால் குறிக்கப்பட்டிருப்பதாகும். கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த ஓதுவார்கள் நட்டபாடைப் பண்ணில் அமைவுற்ற தேவாரச் செழும் பாடல்களை நாட்டக் குறிஞ்சி இராகத்திற் பாடி வந்தனர் எனச் சில பெரியோர்கள் கூறுவதையும் கேட்கின்றோம். ஆகையினாலேயே **நைவளப் பண் நட்டபாடையாகி நாட்டக் குறிஞ்சி** யாயிற்று என்பதை நன்கு அறியலாம். இப் பண்ணில் நம்பியாரூரர் பாடல் ஐந்து பதிகங்கள் உண்டு. இவை இரண்டு கட்டளையாகப் பிரிபடும் என்பர். இவற்றில் திருக்கழுக்குன்றப் பதிகம் நட்டபாடைப் பண்ணில் இரண்டாம் கட்டளையாகும் ஆதலால் அம் முறைப்படி இசைப்படுத்தியுள்ளேன். அறிஞர்கள் பயின்று ஆக்கம் பெறுவார்களாக.

இசைநிலை: குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம்

அலகுநிலை: 0 – 4 – 8 9 – 13 17 – 18

இதுவே ஏழ் பெரும்பாலையில் தாரமுறையில் குரல் குரலாக வந்த **செம்பாலை.** இது இக்காலத்தில் நமது நாட்டில் 28 ம் மேளமாகிய அரிகாம்போதி என வழங்கிவருகிறது.

இப் பெரும்பண்ணின் முதற்றிறம் **நைவளம்** எனப்படும்; இப் பண் சங்க இலக்கியங்களில் உரிய இடத்தில் ஆங்காங்குக் கூறப்படுகிறது. முற்காலத்தில் தமிழ் நாட்டில். பொருநரும் விறலியும் இப் பண்ணில் அமைந்த பாடல்களைப் பாடி ஆடி வருவது நிரம்ப வழக்கில் இருந்தமையால், வேற்றவர்கள் தமிழ் நாட்டில் வந்து பழகியகாலத்து, கூத்தருக்கு ஆடல்வகையில் ஒரு சிறந்த மொழி போன்று விளங்கிய இந்த **நைவளப் பண்ணினை** அவர் மொழியில் **நாட்டிய பாஷா** எனக் கூறிப் போந்தனர். பின்னர், தமிழ் மக்களும் இச் சொல்லாலேயே இப் பண்ணினை உணர, காலவகையில் இச் சொல்லும் தமிழின் நீர்மையில் திரிபு அடைந்து **நட்ட பாடை** ஆயிற்று. இவ்வுண்மையைப் பெயர் அளவில் ''நைவளம் என்பது நட்டபாடை'' எனப் பிங்கலந்தை நிகண்டு நமக்குக் கூறுகிறது. ஆகவே நட்டபாடை என்ற சொல்லினை நைவளம் என வழங்குவதே நலம் என அருட்டிரு விபுலாநந்த அடிகளார் கூறியிருப்ப

தனைத் தமிழ்மக்களாகிய நாம் ஏற்றுக் கொள்வதே நலம். ஒருபெரும் பண்ணின் பிரிவாகிய திறத்தினைக் கிளை நீங்கிய திறம் எனவும் நட்பு நீங்கிய திறமென வும், பகை நீங்கிய திறமெனவும் இவற்றுள் முற்பகை நீங்கிய திறம் எனவும் பிற்பகை நீங்கிய திறம் என வும் இணை நீங்கிய திறம் எனவும் கீழிணை நீங்கிய திறம் எனவும் மேலிணை நீங்கிய திறம் எனவும் பல் வேறு வகைப்பட இசைத் தமிழில் கூறுவதுண்டு.

கிளை யென்பது ஏழிசை நிரலில் ஐந்தாமிசை யாகும். இதனைக் கிளையெனப் படுவது கிளக்குங் காலை நின்ற நிரலில் ஐந்தா மிசையே என்பதனானும் அறியலாம்.

நட்பு என்பது ஏழிசைநிரலில் நான்காமிசை யாகும். இதனை,

ஒன்பா னலகில் நட்பாய் நின்று
நான்கா மிசைதான் நனிசிறக் கும்மே.

என்பதனாலும் அறியலாகும். பகை என்பது ஏழிசை நிரலில் மூன்றும் இசையும் ஆறும் இசையும் ஆகும். இதனை,

ஆறும் இசையும் மூன்றும் இசையும் அரும்
பகை யென்ப அறிந்திசி னோரே

என்பதனானும் அறியலாகும்.

இணை என்பது, இரண்டாமிசையும் ஏழாமிசை யும் ஆகும்; இதனை,

இணை எனப்படுவ கீழும் மேலும்
அணைவுறத் தோன்றும் அளவில வென்பர்

என்ற முறையிலும் நன்கு அறியலாம். இம்முறை யில் முதல் திறம் கிளை நீங்கியதிறம் ஆனமையினாலே குறிஞ்சி யாழ் எனப்பட்ட செம்பாலைப் பண்ணில் கிளையாகிய ஐந்தாமிசை நீக்கப்பெற்றால் நைவளப் பண் தோன்றும் என அறிந்துணரக் கிடக்கின்றது.

மீண்டும் ஒரு முறை செம்பாலைப் பண்ணினை எழுதிக் கிளை நீக்கிக் காணுவோமாக.

இசைநிலை;	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	விளரி	தாரம்
அலகுநிலை;	0	4	8	9	17	18

இங்கே குரலுக்குக் கிளையாகிய இளி நீக்கப் பெற்றது; நீக்கியபின் நிற்கும் உரு இது.

இப்பொழுது இப் பண் ஆறிசைகளுடன் நிற்ற லால் பண்ணியல் எனப்பட்டது. இவ்விலக்கணத் தினைத் திருஞானசம்பந்தர் நட்டபாடைப் பண்ணி லமைந்ததமது பாடலில் "ஞான சம்பந்தன் சொன்ன பண்ணியல் பாடல் வல்லார்கள் இந்தப் பாரொடு விண்பரி பாலகரே" எனவும் "பண்ணியல் பாடலறாத ஆலூர்" எனவும் கூறியுள்ளமையாலும் மேற்கண்ட கணித முறை நன்கு வலியுறுகின்றது.

மேலே கூறிய ஆறு இசைகளும் இக்காலம்

1. குரல் – 0 – ஷட்ஜமமாகவும்
2. துத்தம் – 4 – சதுச்ருதி ருஷபமாகவும்

மேல் நாட்டறிவில் இறை நிலை

'இணக்கமறிந்து இயைந்து இணங்க' வழி வகுத்துக்கொள்ளத் தவறியதால்தான் உலகத்தில் மனிதன் தோன்றிய கால முதல் மூன்று விதமான போராட்டங்களுக்கு உள்ளாகி வந்திருக்கின்றான். ஒன்று இயற்கையுடனும், இரண்டு தன்னுடன் வாழும் மக்களுடனும், மூன்று தன் உள்ளத்துடனும் அதாவது தன்னுடனும் நேரிய முறையில் இணங்கி இயைந்து வாழத் தெரியாததனாலேயே உலகில் பலவகைப் போராட்டங்கள் நிகழுகின்றன. இயற்கையுடன் இணங்கி அவ்வியற்கையினைத் தனக்காக்கிக் கொண்டு ஒத்துப் போவது பிரகிருதி அறிவு நிலை. தன்னுடன் வாழும் மக்களுடன் இணங்கியிருப்பது அரசியல், பொருளாதார அறிவு. ஆனால் தன்னுடனே இணங்கி அமைந்து வாழ்வது பரந்த நோக்கில் சமய அறிவு ஆகும். ஒருவனுக்கு அவனுள்ளத்துடனேயே உள்ள தொடர்பு, வருத்தம், உறுதியின்மை, உள்ளக் கசப்பு முதலியவை நிறைந்திருந்தால், சூழ இருக்கும் மக்களுடன் அவனுக்குள்ள தொடர்பு நலமாக இராது. உள்ளத்தில் அமைதி நிறைந்திருந்தால் தான், வெளித் தொடர்புகளிலும் நலமும், இயைபும் ஏற்படும் என்று உலகம் போற்றும் சிந்தனையாளர் நடத்திய வானொலிச்சொற்பொழிவில் பெர்ட்ரண்ட்ரஸ்ஸல் என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

சமயத்தின் அவசியத்தை இவ்வாறு மறைமுகமாக அவர் வற்புறுத்தியிருக்கிறார். "மனித உள்ளத்தில் நடைபெறும் போராட்டங்களைப் பற்றி இதுவரை சமயமே கவனித்து ஒழுங்குபடுத்தி வந்திருக்கிறது. ஆனால் தற்காலத்தில் ஒரு சிலர் இப்போராட்டத்திற்கு வழி காண, சமய அறிவு தேவையில்லை, விஞ்ஞான முறையிலேயே வழி காணலாம் எனவும், உளநூலறிவாலும் இப்போராட்டங்களை நிறுத்த ஏற்றதொரு வழியினைக் காண்பிக்க முடியும் எனவும் கூறுகின்றனர். ஆனால் இப் புதிய முறைகள் வேறு உதவியொன்றுமின்றி மனிதனுக்கு அவசியமானவற்றையெல்லாம் அளிக்க முடியுமா? என நான் ஐயப்படுகிறேன்" என்று அவர் மேலும் உறுதியாகக் கூறுவதிலிருந்து மக்கள் வாழ்க்கைக்குச் சமய அறிவு மிக மிக வேண்டப்படுவதொன்று என்பதனை நாம் அறிகின்றோம்.

உலகாதயப் போக்கே மலிந்த மேனாடுகள் சமய அறிவிலும் ஆத்மீகத் துறையிலும் கீழை நாடுகளைப்போல் அவ்வளவு அக்கறை காண்பிப்பதில்லை என்பது ஒருவகையில் உண்மையேயாயினும், அந்நாடுகளிலுள்ள பல விஞ்ஞானிகளும், சிந்தனையாளர்களும், கவிஞர்களும், ஞானிகளும் இறையுண்மை அவசியம்பற்றியும், ஆத்மீகத்தின் மேன்மையைப் பற்றியும் நன்கு விரிவாகப் பேசி உணர்த்துகின்றனர். அவர்களது கருத்துக் குவியல்கள் ஒரு சிலவற்றைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவது நற்பயன் தருவதாக இருக்கும்.

"இறைவனொருவன் உளன் என்றஅழுத்தமான நம்பிக்கை எனக்குண்டு. இந்த அண்ட சராசரங்களின் ஒழுங்கான அமைதி நிலையில் நான் அவரை நேரில் காண்கிறேன். இயற்கை முழுவதிலும் ஓர் அரிய நுண்ணறிவு ஊடுருவிப் பரந்து ஆட்கொண்டிருக்கின்றது எனவும் நம்புகிறேன். இவ்வுலகம் ஒழுங்குக் கட்டுப்பாட்டு அறிவுக்கு எட்டக்கூடிய ஒரு நிறைவுப் பொருள் என்பதே விஞ்ஞான ஆராய்ச்சிகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாகும். எதேச்சையாக நிகழ்ந்த ஒரு தோற்றமே இவ்வுலகம் என்பதை விஞ்ஞான ஆராய்ச்சி அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை." என்று உலகம் போற்றும் பௌதிக விஞ்ஞானி பேராசிரியர் ஐன்ஸ்டீன் 1930 ஆம் ஆண்டில் நியூயார்க் டைம்ஸ் என்னும் இதழில் எழுதிய ஒரு கட்டுரையில் சமயத்தின் அவசியம் பற்றித் தம் கருத்துக்களை அழகாக வெளியிட்டிருக்கின்றார்.

—'மூதறி'

தமிழ் எமதின்னுயிர் அம்மா!

(நொண்டிச் சிந்து)

தமிழ்எம தின்னுயிர் அம்மா!-பெற்ற
தாய்நினைப் பார்க்கினும் பெரிதெமக்
கம்மா!
அமிழ்தினும் இனிதாவ தம்மா-நின்றன்
ஆகத்துப் பால்வழி யாம்பெற்ற
தம்மா!
தமிழ் தமிழ் தமிழென்றுசொல்லி-மிகத்
தலைநிமிர்ந் தோடநடந் திடுகின்றோம்
அம்மா!
இமிழ்திரை வையத்தில் எம்மை-இந்த
இன்மொழிக் காளாக்கி வைத்தநின்
றன்னை (4)

என்னென்று போற்றுவோம் அம்மா!
-எங்கட்கு
இனிவரும்பிறவிக்கும் நீயேஎம் அம்மா!
சொன்னால் புரியுமோ அம்மா!-தமிழ்ச்
சூழலின் இனிமையில் தோயா தவர்க்கு
முன்னால் பிறந்திட்ட தென்னும்-
உண்மை
மூடி மறைத்தும் முகிழ்த்திட்ட தம்மா!
நன்னேயம் கொண்டவ ரெல்லாம்-
தமிழ்
நாட்டிற் பிறந்திலம் என்றேங்கு
கின்றார் (8)

ஆன்றோர் மொழியன்றோ அம்மா!
-அதை
ஆள்பவர் உலகத்தை ஆள்பவர் அம்மா!
சான்றாண்மை தந்திடும் அம்மா!-மிகத்
தாழ்ந்தவர் தம்மையும் தாங்கிடும்
அம்மா!
ஏன்றாரை ஏன்றிடும் அம்மா!-இவை
எல்லாம் இதன்பண்பால் விளைந்திடும்
அம்மா!
தான்றோன்றி வளர்ந்திட்ட தெல்லாம்-
இந்தத்
தாய்மறந் திட்டனள் ஆதலின் கன்னி!
(12)

போப் ஐயர், கால்டுவெல் போல்வார்
-இந்தப்
பொன்மொழித் தன்மைகள் புகலுவர்
கேள் நீ!
வாய்ப்பறை அன்றிது அம்மா!-தெய்வம்
வாழ்வது தமிழ்ப்பாடல் வாய்ந்திடத்
தம்மா!
காப்பது நீயல்ல அம்மா!-பாலிற்
கலந்து தந்ததமிழ் காத்திடும் அம்மா!
சாப்பறை கேட்பினும் அம்மா!-தமிழ்த்
தாய்க்கொரு கேடெனின் தாவிப்
பறப்போம். (16)

சங்கம் வளர்த்திட்ட தம்மா!-தமிழ்
சான்றோர்கள் வாக்கில் தழைத்திட்ட
தம்மா!
மங்காத முத்தமிழ் என்போம்-இந்த
மாட்சிகள் உலகத்து மாமொழிக்கில்லை
சங்கூதும் தமிழ்மறை அம்மா!-உலகோர்
தாழ்ந்து வணங்கும் தமிழ்ப்பண்பு
காட்டி
எங்குமே இவ்வகை இல்லை-எண்ணி
எடுத்தாலும் தொன்மொழி இதுபோல
இல்லை (20)

எழுத்தொடு சொற்பொருள் எல்லாம்-
எங்கள்
இன்பத் தமிழிற்போல் யார்எண்ணிக்
கொண்டார்?
பழுத்த தியற்கையி லன்றோ!-இந்தப்
பார்முழு தும்இதைப் போன்மொழி
யுண்டோ?
அழுத்தமும் திருத்தமும் வாய்ந்து-மாறு
ஐந்திலக் கணங்களும் அழகுறத்
தோய்ந்து
செழித்தது செந்தமி ழம்மா-நின்போல்
சீரிய கற்புடைச் செம்மொழி யம்மா!
(24)

—'ஆடலரசு'

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)

ஐம்புழை வழியாகவும் ஏழ் புழை வழியாகவும் அறியப்பட்டுப் பின்னர் யாழ்க்கருவிகளின்வழி ஐந்து நரம்புகளைக் கொண்டும் ஏழு நரம்புகளைக் கொண்டும் அறிந்து வளர்க்கப்பட்டது. இதன் விரிவான கணித முறைகளையும் அமைப்பு முறைகளையும் இனி எழுதவிருக்கும் இசைத்தமிழ்ப் பயிற்சி நூல்களிற் காணலாம். இவ்வாறு தோற்றிய இசைத்தமிழ் பலவேறு யாழ்க்கருவிகளின் வழியே காலவகையில் பெரிதும் வளர்க்கப் பெற்று அந் நரம்புத் தொகுதிகளைப் பாலைமுறையாகப் (பகுதி பகுதியாகக்) காணப் பெற்று ஏழ் பெரும்பாலை பன்னிருபாலை எனப் பிரிவுபடுத்திச் சிறப்பாக **ஏழிசை** அமைப்பினையே அடிப்படையாகக் கொண்டு சிறந்து விளங்கிய தன்மையினால் நமது இசைத்தமிழ் கால வகையில் எத்துணையோ வளர்ச்சி பெற்றிருக்க வேண்டுமன்றோ!

பண்கள்

இசைத் தொகுதிகளை, ஐந்தாயினும் ஏழாயினும் வளர்ச்சி முறையில் பின்னர் அறியப்பட்ட ஆறிசையாயினும் நான்கிசையாயினும் (ஓர் இசைத் தொகுதியினைப்) பண்டையோர் பொதுவாகப் பண் என்றனர். அன்றியும் கருவியில் பல நரம்புகளைக் கட்டி அவைகளைப் பண்ணல் பரிவட்டணை போன்ற தொழில் முறையில் தொழிற்படுத்தினமையால் பண் எனவும் பெயரமைக்கப் பெற்றது. குழல் இசைத் தொகுதியை ஊதுமிடத்துப் பொதுவாக வங்கியப்பாடல்' எனவும், யாழ் இசைத் தொகுதியை இசைக்குமிடத்துப் பொதுவாக 'யாழ்ப் பாடல்' என

வும் குழலிசையுடனோ யாழிசையுடனோ கண்டத்தால் (குரலால்) பாடுவதற்குக் 'கண்டப் பாடல்' எனவும் பொதுப்படக் கூறப்பட்டது. இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் இயற்கை பற்றியே பண் என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது.

கண்டப் பாடல் முறையில் பண் என்ற சொல்லைக் குறிக்கும் பொழுது,

"மூலாதாரந் தொடங்கிய எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப் பின் இசை என்றும் பண் என்றும் பெயராம். என்னை?

"பாவோடணைதல் இசையென்றார் பண் என்றார்
மேவார் பெருந்தானம் எட்டாலும் – பாவாய்
எடுத்தல் முதலா இருநான்கும் பண்ணில்
படுத்தமையாற் பண் என்று பார்"

எனச் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை உரையினுள்ளே இப் பொருளினைக் கூறும் பகுதியாலும் உணரலாம். இத்தகைய பண்கள் இயற்கை வழியே முதலில் ஐந்தாகி, பின்னர் ஏழாகி பன்னிரண்டாகி, பண் பண்ணியல் திறம் திறத்திறம் எனப் பாகுபாடு கொண்டு அறநிலை புறநிலை அருகியல் பெருகியல் எனவும் பிரிந்து நூற்று மூன்று ஆகிப் பின்னரும் பெருகி நிரம்ப வழக்கில் இருந்ததாகத் தெரிய வருகிறது. இக்காலம், பிங்கலந்தை போன்ற நிகண்டு நூல்களில் 103 பண்களின் பெயர்களை மட்டும் ஒருவாறு காணமுடிகிறது.

இந்த நூற்று மூன்று பண்களில் நமது தேவாரத்தில் கூறப்படும் பண்களின் பெயர்களும் இருக்கின்

றன. திருவாய் மொழிப் பாடல்களில் கூறப்படும் பண்களின் பெயர்களும் காணப்படுகின்றன. இப் பண்களும், பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ் முல்லையாழ் என்ற நால்வகைப் பெரும் பண்களின் வழித் தோன்றின என நூல்கள் கூறுகின்றன. இவைகளை யெல்லாம் அரிய முயற்சியினால் தொகுத்துப் பொதுவாக இசைத் தமிழ்ப் பண்களை ஆராய வாய்ப்பு பல தந்து யாழ் நூல் எழுதிய அருட்டிரு விபுலானந்த அடிகளாரை இங்கு நினைவு கூர்தல் நலம் பயக்கும்.

பாணர்கள்

தமிழ்ப் பண்களை யாழால் இசைத்தும் கண்டத்தாற் பாடியும் தொழில் புரிந்த மக்கள் **பாணர்** எனப்பட்டனர். பண்ணோடு பாடும் பாடலுக்குப் பாண் என்று பெயர். அப் பாணினைத் தொழிலாகக் கொண்ட நீர்மை பற்றியே அவர்கள் **பாணர்** எனப் பட்டனர். இவர்கள் தமிழகத்தில் பெரும்பாணர் சிறு பாணர் எனவும் இருபிரிவாக வாழ்ந்து வந்தனர். இவர்களில் பெண்பாலாரும் இசையில் வல்லவராய்த் திகழ்ந்து பாடினியார் எனப்பட்டனர். இவர்கள் மரபு, பிற்காலச் சோழர் பெருமக்களிற் சிறந்த இராசராச மன்னன் காலம் வரை (பத்தாம் நூற்றாண்டு) தமிழகத்தில் இருந்ததாகத் தெரிகிறது. திருஞானசம்பந்தர் காலத்தில் அவருடன் இருந்து இசை பரப்பிய பெரியவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பதும் நமக்குத் தெரிந்துதானே இருக்கின்றது! ஆகவே

அறிய வேண்டும். இவ்வாறு இயற்கை வழி மக்களால் அறியப்பட்ட இசைத்தமிழிற்கு இரண்டாவது கருவி நரம்புக்கருவியேயாதலாலும் இக் கருவிகளின் மூலமேபின்னர் இசைத்தமிழ்பெருக வளர்ந்ததாலும் நரம்பின் மறை எனவும் (இசைத் தமிழ்) விதந்தோதப் பெற்றது. இதனை

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்" எனவும்,
"அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோ ராறே" எனவும்,
"இசைநிலை நிறைய நிற்குவ வாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே" எனவும்

தொல்காப்பியர் இசைக்கும் இயலுக்கும் பொதுப்படக் கூறிப் போந்தமை கொண்டு நன்கு அறியலாம். நரம்புக் கருவிகளை அதன் ஒலித்தன்மை பற்றி யாழ்க்கருவி எனப்பட்டது. இக்கருவிகளும் காலவகையில் பல்வேறு பெயர்களுடன் விளங்கியதாகப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. நிற்க,

இசை

இசை யென்பது முதன்முதலாக இசைவான ஒரு வகை ஒலியையே குறிக்கும்; இதனை

"இசையெனப் படுவ தியம்புங் காலை
ஒத்துணர் ஒலியின் நீட்சிய தாகும்"

என்பதானும்உணரலாம்.செவிகளால் ஓர்ந்துணர்ந்த ஒலியின் வேறொரு பெயராகிய இசை (பண்டைய தமிழ் மக்களால்) முதன் முதலாகக் குழல் வழி

படை இன்றைக்கு எத்துணையோ ஆயிர மாயிர மாண்டுகளுக்கு முன்னர்த்தான் என்பதில் எத்தகைய ஐயப்பாடுகள் தோன்றுவதற்கும் இடம் இல்லை.

ஆகவே நமது இசைத்தமிழிற்கு முதன்முதற் கருவியாக நிற்பது குழற்கருவியே என்பது உறுதிப் படுகிறது. மேலும், அம் மக்களே முதிர மரக் கொம்புகளை வில் போன்று வளைத்து மரல் மர நாற்றினைக் கயிறாகத் திரித்து அக் கொம்புகளில் கட்டி விரலால் தெறித்து எழும் ஒலியை அறிந்து பின் அளவு முறையில் பல நரம்புகளையும் கட்டி அந் நரம்பின் தீங்குரல்களை முன் செய்த குழலின் ஒலியைக் கொண்டு நிறுத்துத் தன்னறிவின் முதிர்ச்சியினாலே விளங்குவார்கள் எனவும் பழைய தமிழ் நூல்களே கூறுவதால் இசைத்தமிழிற்கு முதலாவதான குழற் கருவியையும் இரண்டாவதான யாழ்க்கருவியையும் கண்டு ஆக்கியவர்கள் நமது பழந்தமிழ் நாட்டு முல்லை நில மக்களேயாவர் என்பது நன்கு அறிந்துணரக் கிடக்கின்றதல்லவா?

இதனால்தான் இசையை மொழியுடன் சேர்த்துக் கூற, (பண்டைக் காலத்திலேயே) வாய்ப்பு ஏற்பட்டுவிட்டதுபோலும்! இவ் வாய்ப்பு ஏனைய மொழிகளுக்கு ஏற்படவில்லை என்பதைப் பேரறிஞர்கள் அறிவார்கள். இதனால் நமது இசைத் தமிழ் மிகப் பழமை வாய்ந்ததும் பெருமைவாய்ந்ததுமாகும் என்பதையும் அது தனித்த தமிழ் மக்களாலே முதன் முதலில் ஆக்கப்பட்டது என்பதையும் நாம் நன்கு

நம் தமிழகத்தில் இசையும் இசையைத் தொழில் புரிந்த மக்களும் மிக இன்றியமையாத வகையில் இருந்தனர் எனவும் இம் மக்களால் இசைத் தமிழ் காலவகையில்எத்துணைஎத்துணைத்திறம்பட வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும் அறிந்துணரக் கிடக்கின்றதல்லவா! அன்றியும், அப் பாணர் பெருமக்களால் வளர்த்து வரப்பட்ட இசைத் தமிழ், சிலப்பதிகார காலத்தில் உயர்நிலையில் சிறந்து விளங்கிப் பின்னர்ச் சில நூற்றாண்டுகள் மங்கியிருந்து மீண்டும் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் இவர்கள் காலத்தில் நன்னிலை எய்தியது எனப் பலர் ஆராய்ச்சியாளர்கள் கூறுவதனாலும் நமக்குப் பல உண்மைகள் கிடைக்கின்றன.

பண்ணுடன் பாடும் பாடல்கள்

பழமையும் பெருமையும் வாய்ந்த நமது இசைத் தமிழிற்குப் பாடல்கள், பழைய பரிபாடல் வகைகளும் வரிப்பாடல் வகைகளுமே மிகச் சிறந்த பாடல்களாகும். இவைகளையடுத்துத் தூய இசைத் தமிழ் வழியெழுந்த பழம் பாடல்கள் நம் தேவாரப் பாடல்களும் திருவாய்மொழிப் பாடல்களும் ஆகும். இவற்றுள் இன்றைய வரை இசையோடு வழக்கில் இருப்பது தேவாரப்பாடல்கள் மட்டுமே என்பது நாடறிந்து கிடக்கின்றது. இஃதிவ்வாறிருக்க,

தமிழுணர்ச்சி மிக்குள்ள இக்காலத்தில், நம் தேவாரப்பாடல்களை நம் நாட்டில்கோயில்களிலன்றிப் பிற இடங்களிலும்நிரம்பத் தமிழ்மக்கள் பாடவேண்

டும் என்று பல பெரியோர்கள் முன்னிற்கும் இந் நாளில், நமது கடமையையும் உணர வேண்டியவர் களாக இருக்கின்றோ மல்லவா? "ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ் மாலை ஆதரித்து இசை கற்று வல்லார் சொலக் கேட்டு உகந்தவர் தம்மை" என்ற ஆணையின்படி நடத்தலும் நடப்பித்தலும், இக்காலத் தென்னாட்டு இசை மரபினையும் நம் பண்டைய இசைத் தமிழின் நீர்மையினையும் ஏதோ கூடிய வரையில் வழக்கிற்கும் இலக்கணத்திற்கும் மாறுபடாத வகை யில் சற்றேனும் தெளிவு பெற உணர்ந்து இசை யையே அடிப்படையாகக் கொண்டு நம் தேவாரச் செழும்பாடல்களை நல்ல முறையில் பாடுவதற்கான சில ஆக்க வேலைகளைச் செய்து வரவேண்டும் என் பதும் சிறந்த கடமையாக உள்ளது, இவ்வாக்க வேலை யால் நம் தேவாரப்பாடல்களுக்கும்பாடுவோர்க்கும் நாட்டில் பெருமைதானே ஏற்படும்! சிறுமையா ஏற் படப் போகிறது? அறிஞர்கள் உணரவேண்டும். நிற்க. நம் நாட்டில் மிகப் பழைய இசைத்தமிழின் வழி எழுந்த தேவாரப் பாடல்கள் இன்றைக்கு நமது கையில் இருப்பவை திருஞானசம்பந்தரால் பாடப் பெற்ற திருப்பதிகங்கள் 334-ம் திருநாவுக் கரசரால் பாடப்பெற்ற திருப்பதிகங்கள் 312-ம் திருநாவலூரர் என்ற நம்பியாரூரராம் நம் சுந் தரர் பாடிய பதிகங்கள் 100-ம் ஆகும். இவையன்றி. காரைக்கால் அம்மையார் பாடியதும் ஏனைய சிவ நெறிச் சான்றோர்கள் பலர் பாடியதுமான பல பாடல்களும் பழைய பண் பெயரோடு இருக்கின்றன.

முன்னுரை

இசைத் தமிழ்

நம் தாய்மொழியாகிய தமிழ் மொழி மிகப் பழையகாலந்தொட்டு மூவகையாகவே உணரப்பட்டு வந்துள்ளமை யாவரும் அறிந்ததே. அம் மூவகை தான் இயற்கை முறையில் இயல், இசை, நாடகம் (ஆடல்) எனப் பகுத்துணரப்பட்டதால், பழந்தமிழ் மக்கள் இயல் வகையில் நன்கு சிறப்படைந்த பின் னரே, இசைப் பண்பையும் உணர்ந்து இயலுடன் பொருந்தக் கண்டனர் எனலாம்.

இசையின் தோற்றம் முதன் முதலில் குழற் கரு வியின் வழியாகவே எழுந்தது எனக் கூறப்படுகிறது. அதாவது, பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்த மிகப்பழைய முல்லை நில மக்சள் காடுகளில் ஆநிரை மேய்த்து வருங்கால் ஆங்குள்ள கழைகளில், இயல்பாக வண்டு கள் துளையிட அத் துளைகளின் வழியே காற்று செல் வதனால் உண்டாகும் ஒரு வகை ஒலியை அறிந்து அத னால் அவர்கள் உள்ளம் ஏதோ ஒரு வகை யில் மகிழ்ச்சியடைய, பின்னர் அவர்களும் யாதோ ஓர் எண்ணத்துடன் கழைத் துண்டுகளை நறுக்கி எடுத்துத் தீக் கடை கோலினாலே தங்கள் கைவிரல் கள் பொருந்துமாறு துளையிட்டு வாய்வைத்தூதி மகிழ்ந்தனர் என, பத்துப்பாட்டுப் (பெரும்பாணாற் றுப்படை) போன்ற மிகப் பழைய தமிழ்ச் சங்க நூல்கள் கூறுவதால், நமது இசைத்தமிழிற்கு அடிப்